## 138. பட்சிக்கிற அக்கினியே சுட்டெரிக்கும்

**பல்லவி**

பட்சிக்கிற அக்கினியே சுட்டெரிக்கும் அக்கினியே
பெந்தேகோஸ்தே நாளில்
இறங்கின தேவ அக்கினியே

**சரணங்கள்**

1. சீனாய் மலையினில் இறங்கின அக்கினியே
எங்கள் மேலே இறங்கிடும் தேவ அக்கினியே
- பட்சிக்கிற

2. முட்செடியில் பற்றின பட்சிக்கிற அக்கினியே
எங்கள் மேலே இறங்கிடும் தேவ அக்கினியே
- பட்சிக்கிற

3. எலியா பலிப்பீடத்தில் இறங்கின அக்கினியே
எங்கள் மேலே இறங்கிடும் தேவ அக்கினியே
- பட்சிக்கிற

4. மேல்வீட்டு அறையிலே பிரிந்திருக்கும் நாவைபோல்
இறங்கின அக்கினியே எங்களின்மேல் இறங்குமே
- பட்சிக்கிற